**இனிமையான குழந்தைகளே, உங்களின் புத்தி மகிழ்ச்சியால் சதா நிறைந்து இருக்க வேண்டும். ஏனெனில் நீங்கள் இப்போது பாபாவுக்குச் சமமாக ஞானம் நிறைந்தவர் ஆகி இருக்கிறீர்கள்.**

கேள்வி: குழந்தைகளாகிய நீங்கள் 21 பிறவிகளுக்கு எந்த ஆதாரத்தில் செழிப்பாக ஆகின்றீர்கள்?

பதில்: சங்கம யுகத்தில் நீங்கள் நேரடியாக பாபாவுக்கு தன்னுடைய அனைத்தையும் கொடுத்து விடுகின்றீர்கள். அனைத்தையும் பாபாவுக்கு ஒப்படைத்து விடுகின்றீர்கள். இதற்குப் பதிலாக, நீங்கள் 21 பிறவிகளுக்கு செழிப்பாக ஆகிவிடுகின்றீர்கள். பாபா சொல்கிறார் - இந்த நேரம் உங்களிடம் என்னவெல்லாம் தேவையற்ற குப்பைகள் உள்ளதோ, அவற்றை என்னிடம் கொடுத்து விடுங்கள், இறப்பதற்கு முன்பாக தன்னுடைய அனைத்தையும் பரிமாற்றம் செய்து விடுங்கள். அப்போது எதிர்காலத்தில் அதற்கான பிரதி பலன் கிடைத்து விடும்.

பாடல்: ஓம் நமோ சிவாய.............

ஓம்சாந்தி. சாலிகிராமங்களுக்காக சிவபகவானின் மகா வாக்கியம். ஆன்மீகக் குழந்தை களுக்கு ஆன்மீகத் தந்தை புரிய வைத்துக் கொண்டிருக்கிறார். இங்கே நாம் ஆத்மா என்று புரிந்து அமர வேண்டுமே தவிர உடல் என்று அல்ல என்பது இப்போது உங்களுக்குத் தெரியும். மேலும் முழு உலகத்திலும் ஆத்மா என்றால் என்ன என்று அறிந்த ஒரு மனிதர் கூட கிடையாது. ஆத்மாவையே அறியவில்லை என்றால் பரமாத்மாவை மட்டும் எப்படிப் புரிந்து கொள்ள முடியும்? பாபா மூலமாகத் தான் ஆத்மாவைப் பற்றிய அறிவு கிடைக்கிறது. ஆத்மா மற்றும் பரமாத்மா வையே தெரிந்து கொள்ளாத காரணத்தினால் தான் மனிதர்கள் துக்கமாக இருக்கிறார்கள். இந்த நாடகம் அதாவது கல்ப விருட்சத்தின் ஆயுள் 5000 வருடங்கள் என்பது இப்போது குழந்தை களுக்குத் தெரிந்து விட்டது. அதன் (கல்ப விருட்சத்தின்) விதை சைத்தன்யமானது என்பதால் தான், விதையாகிய என்னிடமிருந்து இவ்வாறு மரம் உருவானது என்று சொல்லப்படுகிறது. இப்போது அது (உயிரற்ற மரம்) ஜடமானது மற்றும் இது ஒன்று தான் சைதன்யமான (உயிரோட்ட முடைய) மனிதப் படைப்பின் பலதரப்பட்ட தர்மத்தினரை உடைய மரம் ஆகும். இப்போது குழந்தைகளாகிய உங்களிடம் முழு ஞானமும் இருக்கிறது. உங்களில் கூட வரிசைக்கிரமமாக முயற்சியின் ஆதாரத்தில் ஆரம்பத்திலிருந்து கடைசி வரை முழு மரத்தின் ஞானமும் கிடைத்திருக்கிறது. விதையில் எப்படி முழு மரத்தின் ஞானமும் இருக்கிறதோ, அதுபோலத் தான் ஆகும். இந்த தந்தை சைத்தன்யமான விதை ரூபமாவார், பரமபிதா பரமாத்மா சத்-சித்-ஆனந்த சொரூபமானவர் என பாடவும் செய்கிறார்கள். நிராகாரமானவரின் மகிமை பாடப்படுகிறது. அவருடைய மகிமை அனைத்தையும் விட முற்றிலும் தனிப்பட்டது. மனிதர்களுக்கு எதுவும் தெரிவதில்லை. தேவதைகளுக்கு இந்த ஆஸ்தி இங்கே தான் கிடைக்கிறது. ஆனால் அவர் களுக்குக் கூட அங்கே இந்த ஞானம் இருப்பதில்லை. இது அதிசயமான விசயமல்லவா! இங்கே இப்போது உங்களுக்கு முழு ஞானமும் கிடைக்கிறது. புத்தியில் ஞானம் இருக்கிறது - இந்த சிருஷ்டிச் சக்கரம் எப்படிச் சுற்றுகிறது? பாபா வந்து புதிய ராஜதானியை ஸ்தாபனை செய்கிறார். நீங்கள் இந்த நாடகத்தின் நடிகர்கள் ஆவீர்கள். உங்களுக்கு மட்டும் தான் நாடகத்தின்

முதல்-இடை-கடைசி, படைப்பு மற்றும் படைப்பவர் பற்றிய ஞானம் இருக்கிறது, வேறு யாரிடமும் கிடையாது. சூத்திர வர்ணத்தவர்களிடமும் (குலம்) இந்த ஞானம் கிடையாது மற்றும் தேவதா வர்ணத்தவர்களிடமும் இந்த ஞானம் கிடையாது. யாரேனும் கேட்டால் அதிசயப்படுவார்கள். மனிதர்கள் சொல்கிறார்கள், கொண்டாடக்கூடிய இந்த விழாக்கள் அனைத்தும் பரம்பரை பரம்பரை யாக நடந்து வருகிறது. ஆனால் பாபா புரிய வைக்கிறார், சத்யுகத்தில் இவை கொண்டாடப்படுவதே இல்லை. விழாக்களைப் பற்றி யாருக்கும் தெரியாது. தசரா, தீபாவளி விழக்கள் வரப் போகிறது என்று இப்போது சொல்கிறார்கள் அல்லவா! அங்கே இந்த எதுவும் நினைவில் இருப்பதில்லை. சிறிதுகூட எந்தக் கவலையும் இல்லாமல் இராஜ்யம் செய்து கொண்டிருப்பார்கள்.

இப்போது இங்கே உங்கள் புத்தியின் பூட்டு திறக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் நடிகர்களாக இருக்கிறீர்கள். இந்த நாடகத்தின் படைப்பவர், டைரக்டர், முக்கிய நடிகர்கள் போன்றவற்றை தெரிந்திருக்கிறீர்கள். இந்த ஞானம் யாருடைய புத்தியில் இருக்குமோ, அவர்களுக்கு அபாரமான குஷி இருக்கும். இறை தந்தையைத் தான் ஞானம் நிறைந்த ஞானக்கடல் என்று சொல்கிறோம். எந்த மாதிரியான ஞானம்? உங்களைத்தவிர வேறு யாரும் இதைப் புரிந்து கொள்ள முடியாது. இறைவனைத் தான் ஞானம் நிறைந்தவர் உலகத்தில் சர்வ வல்லமை படைத்தவர் எனப்படுகிறது. எதனுடைய ஞானம்? அனைத்து வேத சாஸ்திரங்கள், கிரந்தங்கள், உலகத்தின் ஆரம்பம்-இடை-கடைசி பற்றிய ஞானம். சாஸ்திரங்களில் இந்த ஞானம் கிடையாது. அதுவோ பக்தி மார்க்கத்தின் சாஸ்திரங்கள் ஆகும், அதை பூஜை மட்டும் செய்து கொண்டே இருக்கின்றீர்கள்! மற்றபடி படைப்பவர் மற்றும் படைப்பு பற்றிய ஞானம் கொஞ்சமும் இல்லை. ஆகையினால் தான் ரிஷி-முனி போன்றவர்கள் கூட எங்களுக்கு படைப்பு மற்றும் படைப்பவரைப் பற்றித் தெரியாது என்கின்றனர். ஒரே ஒரு பாபா தான் புரிய வைக்கிறார். பிறகு எங்கே இருந்து தெரிந்து கொள்வார் கள்? இப்போது நீங்கள் பாபா மூலமாக கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள், பிறகு இந்த ஞானம் மறைந்து போய் விடுகிறது. உங்களைத் தவிர வேறு யாருக்கும் இந்த ஞானம் தெரியாது. உங்களுக்கு எவ்வளவு பெரிய ஞானம் கிடைத்திருக்கிறது. ஆக குழந்தைகளாகிய உங்களுக்கு எவ்வளவு குஷி இருக்க வேண்டும்! அந்த மக்கள் மருத்துவத்தை (டாக்டர்) படிப்பதற்கும், கற்றுக் கொள்வதற்கும் வெளி நாடுகளுக்குச் செல்கின்றனர். ஆனால் பாபா உங்களை அப்படி ஆக்குகிறார், அங்கே (சத்தியுகத்தில்) டாக்டர் போன்றவர்களே கிடையாது. எல்லைக்கப்பாற்பட்ட ஞானம் நிறைந்த தந்தை மூலம் நாம் அனைத்தையும் தெரிந்து கொள்கிறோம். நாம் அவருடைய (வம்சம்) குழந்தைகள் ஆவோம். ஆக ஞானத்தின் மூலம் புத்தி எவ்வளவு நிரம்பி இருக்க வேண்டும். எவ்வளவு குஷி இருக்க வேண்டும்! நமக்குத் தெரியாதது என்று எந்த விசயமும் கிடையாது. உலக மக்கள் என்னவெல்லாம் படிக்கின்றனரோ, அவையெல்லாம் ஒன்றுமே கிடையாது. பக்தி மார்க்கத் தின் சாஸ்திரங்கள் எவ்வளவு படிக்கின்றனர்! ஆனால் இந்த சிருஷ்டிச் சக்கரம் எப்படிச் சுற்றுகிறது? என்று யாருக்குமே தெரியாது. குழந்தைகளாகிய நீங்கள் இப்போது மாஸ்டர் ஞானம் நிறைந்தவர்கள் ஆகின்றீர்கள். சுருக்கமாகவே அனைத்தையும் தெரிந்து கொண்டீர்கள். மற்றபடி தமோ பிரதானமான ஆத்மாவை சதோ பிரதானம் ஆக்க வேண்டும். சிலர் தமோ பிரதானத் திலிருந்து தமோ ஆகியிருக்கலாம், சிலர்

தமோவிலிருந்து ரஜோ ஆகியிருக்கலாம், சிலர் ரஜோவிலிருந்து சதோ ஆகி இருக்கலாம். ஆனால் சதோபிரதானம் என்று சொல்லமாட்டார்கள். சதோபிரதானம் ஆகிவிடும் போது வரிசைக்கிரமமான முயற்சியின் படி கர்மாதீத் நிலை ஏற்பட்டுவிடும். பிறகு இராஜ்யம் செய்ய புதிய உலகம் வேண்டும். ஆகையால் பழைய உலகத்தின் அழிவு ஏற்படுகிறது. எப்போது இந்த யக்ஞம் முழுமை அடையுமோ, அப்போது முழு உலகத்தின் முடிவு (ஆஹுதி) ஏற்படும். இந்தப் படிப்பு முடிந்து விடும், பிறகு வரிசைக்கிரமமான முயற்சியின் ஆதாரத்தில் கர்மாதீத் நிலை அடைவீர்கள். எப்படி அவர்கள் பரிட்சையில் தேர்ச்சி அடைந்து பிறகு வகுப்பு மாற்றப்படுகிறார்களோ, அதுபோல நீங்களும் மரணலோகத்திலிருந்து அமரலோகத் திற்குச் செல்வீர்கள். நாம் அமரலோகத்தில் இருந்தோம், பிறகு 84 பிறவிகள் எடுத்து எடுத்து மரண லோகத்திற்கு வந்து விட்டோம்.

நீங்கள் சொல்கிறீர்கள், இப்போது நாங்கள் படித்துக் கொண்டிருக்கிறோம், பிறகு அமரலோகத்திற்குச் சென்று தேவி தேவதைகளாக ஆவோம். பாபா தான் மனிதரிலிருந்து தேவதை ஆக்குகிறார். தூய்மையற்ற வர்களை தூய்மையான தேவி தேவதைகளாக யார் ஆக்குவார்? தேவி தேவதைகளை உருவாக்க இங்கே தேவதைகள் யாரும் கிடையாது. லக்ஷ்மி நாராயணன் வேண்டுமல்லவா! அவர்கள் இங்கே கிடையாது. இந்த நேரம் பாபா தான் வந்து கற்பிக்கிறார் என்று குழந்தைகளாகிய உங்களுக்குத் தெரியும். சொர்க்கத்தின் இராஜ்ய பாக்கியத்தைக் கொடுக் கிறார். சொர்க்கம் இருந்தது, லக்ஷ்மி நாராயணனின் இராஜ்யம் இருந்தது அல்லவா! இவர்களின் இந்த இராஜ்யத்தை யார் ஸ்தாபனை செய்தது? சொர்க்கத்தைப் படைக்கும் இறை தந்தை தான் தேவி தேவதைகள் இராஜ்யம் செய்யக் கூடிய சொர்க்கம், சத்யுகத்தை ஸ்தாபனை செய்தார். அங்கே வேறு எந்த கண்டமும் கிடையாது. ஒரே ஒரு பாரதம் தான் இருந்தது. உங்களின் புத்தியில் இருக்கிறது -- நாம் இராஜ்யம் செய்யும் போது வேறு யாரும் இருக்க மாட்டார்கள். உங்கள் புத்தியில் இந்த முழு மரமும் இருக்கிறது, இதன் விதை மேலே இருக்கிறது. அவர் சத்திய மானவர், சைத்தன்யமானவர் ஆவார். ஆத்மா அழியாதது, பாபா கூட அழியாதவர் ஆவார். பாபாவிடம் என்ன ஞானம் உள்ளதோ, அதை உங்களுக்குக் கற்றுத் தருகிறார். முழு மரமும் நிற்கிறது, பாபா அதன் மேலே இருக்கிறார். இந்த நேரம் மனிதர்கள் தமோ பிரதானமாக முட்களாக இருக்கின்றனர். மரம் பழையதாகும் போது காய்ந்து போய் விடுகிறது. ஆகையால் இதை முள் நிறைந்த காடு என்று சொல்லப்படுகிறது. அங்கே மலர்கள் நிறைந்த பூந்தோட்டமாக இருக்கும். தந்தை தோட்டக்காரராகவும் இருக்கிறார், படகோட்டி, தோட்டக்காரன், தலைவன் என்றெல்லாம் சொல்கிறார்கள். பாபா படகோட்டியாக இருக்கிறார். நீங்கள் கூட படகோட்ட கற்றுக் கொண்டிருக் கிறீர்கள். ஒவ்வொருவருடைய படகும் மிகப் பழையதாகி விட்டது. படகு, ஆத்மா மற்றும் சரீரம் இரண்டாலும் ஆக்கப்பட்டுள்ளது. பாடவும் செய்கிறார்கள் -- என்னுடைய படகை கரையேற்றுங்கள். இப்போது படகும்---------பழையது, சரீரமும் பழையது. இப்போது எப்படி கரையேறும், மேலும் எங்கே செல்லும்? கரை என்று எதை சொல்லப்படுகிறது? முக்தி தாமம் -ஜீவன் முக்திதாமம் என்றால் என்ன? என்று உங்களுக்குத் தெரியும். பாபாதான் வந்து இப்போது கரை சேர்க்கிறார். துக்கதாமத்திலிருந்து சுகதாமத்திற்கு அதாவது விஷக்கடலிலிருந்து பாற்கடலுக்கு அழைத்துச் செல்கிறார். அவர்கள் பாட மட்டும் செய்கிறார்கள் -

என்னுடைய படகை கரையேற்றுங்கள், தோட்டக்காரரே! வாருங்கள், வந்து முட்களை மலராக்குங்கள் என்று. உங்களுக்கும் முன்பு தெரியாமல் இருந்தது. இப்போது மூலவதனம், சூட்சுமவதனம், சத்யுகத்திலிருந்து கலியுகம் வரை அனைத்து ரகசியங்களையும் தெரிந்து கொண்டீர்கள். யார் தெரிந்திருக்கிறார்களோ அவர்களே (மற்றவர்களுக்கும்) சொல்கிறார்கள். உள்ளுக்குள் ஞானம் என்றச்சாறு வடிந்து கொண்டிருந்தால் எப்போதும் மகிழ்ச்சியாக இருப்பார்கள். கவலைப்படுவதற்கான எந்த விசயமும் கிடையாது, கவலையிலிருந்து விடுபட்டு விடுகின்றீர்கள்.

பாபா நம்மை அழைத்துச் செல்கிறார் என்று நீங்கள் அறிவீர்கள். இப்போது நாம் பாபா போல ஆகிக் கொண்டிருக்கிறோம். குழந்தை தந்தைக்குச் சமமாக ஆகிறதல்லவா! பாபா ஞானம் நிறைந்தவர் ஆவார், உங்களையும் ஞானம் நிறைந்தவராக்குகிறார். ஆத்மாக்களின் இணைப்பே பரமாத்மா தந்தையுடன் தான் ஆகும். ஆத்மா சொல்கிறது, பாபாவிடம் என்ன ஞானம் உள்ளதோ அதை ஆத்மாக்களாகிய நமக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறார். நீங்கள் ஆன்மீகத் தந்தையின் ஆன்மீகக் குழந்தைகள் ஆவீர்கள். இது கூட புதிய விசயம் அல்லவா! பாபா தவிர யாரும் சொல்ல முடியாது. அந்த நிராகார தந்தை கூட சாகாரத்தின் (பிரம்மா) ஆதாரம் எடுத்துத் தான் சொல்கிறார். இல்லையானால் நீங்கள் கேட்க முடியாது. குழந்தைகளை பாபா தனக்குச் சமமாக ஆக்குகின்றார். அந்த பாபா தான் துக்கத்தை நீக்கி சுகத்தைக் கொடுப்பவர் ஆவார். அவருடைய மகிமை தான் உங்களுடைய மகிமையும் ஆகும். எந்த வேறுபாடும் கிடையாது. மற்றபடி என்ன வித்தியாசம் உள்ளது? நான் பிறப்பு-இறப்பில் வருவதில்லை, நீங்கள் பிறப்பு-இறப்பில் வருகின்றீர் கள். நீங்கள் என்னை ஞானக்கடல் என்று சொல்கின்றீர்கள் என்றால் குழந்தைகளாகிய உங்களுக்கு ஞானம் கொடுக்கின்றேன். நான் சுகக்கடல், தூய்மைக்கடல், அமைதிக்கடலாக இருப்பதால் உங்களுக்கும் இந்த ஆஸ்தியைக் கொடுக்கின்றேன்.

இந்த முழு சக்கரமும் 5000 வருடங்களுக்குப் பிறகு மீண்டும் சுற்றும் என்று உங்களுக்குத் தெரியும். இந்த ஞானம் தான் வருமானத்திற்கு ஆதாரம் ஆகும். எவ்வளவு படிக்கிறோமோ, அவ்வளவுக்கு ஞானத்தின் மூலம் வருமானம் ஏற்படுகிறது. இது ஞானமாகவும் இருக்கிறது, தொழிலாகவும் இருக்கிறது. மக்கள் (மரணத்திற்கு முன்பு) ஒப்பந்தம் செய்து கொள்கின்றனர். நீங்கள் என்ன கொடுக்கிறீர்கள்? குப்பைகளை. இறந்த பிறகு ஈமக்கிரியை செய்பவருக்கு தேவையற்ற குப்பைகளைத் தான் கொடுக்கிறார்கள். நீங்கள் வாழ்ந்து கொண்டே கொடுக்க வேண்டும். ஈஸ்வரனுக்காகக் கொடுக்கிறீர்கள். இப்போது என்ன பழைய கட்டில் போன்றவற்றை ஈஸ்வரனுக்குக் கொடுப்பீர்களா என்ன? பாபா சொல்கிறார், நீங்கள் இறப்பதற்கு முன்பே அனைத்தை யும் கொடுத்து விடுங்கள். இந்தப் பழைய பொருட்கள் உங்களுக்கு ஒரு காரியத்திற்கும் உதவாது. எவ்வளவு பணக்காரராக இருந்தாலும் எத்தனை நாளுக்கு அப்படி இருப்பார்? ஒரு பிறவிக்குத் தான். பிறகு கர்மத்தின் ஆதாரத்தில், எங்கு போய் பிறவி எடுப்பார் என்று தெரியாது. நீங்களோ பாபாவிடமிருந்து 21 பிறவிகளுக்காக முயற்சியின் ஆதாரத்தில் பெறுகின்றீர்கள்.

இது ஆன்மீக சேவை ஆகும். உலகாயத சேவையை முழு உலகமும் அறிந்திருக்கின்றது. ஆன்மீக சேவை யாருக்கும் தெரிவதே இல்லை. சுப்ரீம்

ஆத்மா தான் வந்து ஞானம் கொடுக்கிறார். அந்த சுப்ரீமின் (பரமத்மாவின்) பிறப்பைக் கூட கொண்டாடுகின்றோம். அவரைத் தான் சுகக்கடல், சாந்திக்கடல், துக்கத்தை அழிப்பவர், சுகத்தைத் தருபவர் என்கிறோம். சிவன் என்ற பெயர் இருக்கிற தல்லவா! ஜெயந்தி கூட கொண்டாடுகிறார்கள். ஆனால் புத்தியில் எதுவும் இல்லை. பாபா தான் இந்த அனைத்து ரகசியங்களையும் சொல்கிறார். மீண்டும் ஐந்தாயிரம் வருடங்களுக்கும் பிறகு இவற்றைக்கூறுவார். இந்த ஞானம் சத்யுகத்தில் இருப்பதில்லை ஏனெனில் ஆத்மாக்கள் சதோபிர தானமாக இருக்கும். ஞானத்தினால் தான் அவர்கள் அப்படி ஆகிறார்கள். இவை புதிய விசயங்கள் அல்லவா! லக்ஷ்மி நாராயணனுடைய கோயிலை நாம் ஏன் கட்டுகின்றோம்? அவர்களுக்கு இந்த இராஜ்யத்தை யார் கொடுத்தார்? எப்படி இந்த பதவியை அடைந்தார்? என்பவை கோயில் கட்டுபவருக்கே தெரிவதில்லை. கர்மத்தின் பலன் என்று சொல்கிறார்கள் அல்லவா! இப்போது பாபா அமர்ந்து கர்மம்-அகர்மம்-விகர்மத்தின் ரகசியத்தைப் புரிய வைக்கிறார். அவர்களும் (லக்ஷ்மி நாராயணனும்) இந்த ஞானத்தை கேட்டிருப்பார்கள். பகவானுடைய மகாவாக்கியமாகவும் இருக்கிறது - கீதை மூலமாகத் தான் ஆதி சனாதன தேவி தேவதா தர்மம் ஸ்தாபனை ஆனது. அங்கே மிகக் குறைந்த மனிதர்களே இருப்பார்கள். மீதமுள்ள முழு பழைய உலகமும் எங்கே போனது? கண்டிப்பாக அழிந்திருக்க வேண்டும். மஹாபாரத யுத்தம் கூட பாடப்பட்டிருக்கிறது. கிரிதர கவிராஜ் என்கிறோம், இப்போது கிரிதரன் என்று கிருஷ்ணரை சொல்கிறோம். கவி யார்? சிவபாபாவை கவி என்று சொல்லப்படுகிறது. கவி என்றால் சொல்பவர் ஆவார்.

ஆபத்துக்கள் நிறைய வரும் என்று உங்களுக்குத் தெரியும். பழைய உலகத்தின் அழிவுக்காக என்னென்ன பொருட்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இது அதே மஹாபாரத யுத்த மாகும். இந்த நேரம் பகவானே வந்து ருத்ர ஞான யக்ஞத்தைப் படைக்கிறார். பகவான் எதற்காக யக்ஞத்தைப் படைக்கிறார்? சுகம் சாந்திக்காகத் தான் யக்ஞம் படைக்கப்படுகிறது. பாபா அனைவருடைய துக்கத்தை நீக்கி சுகத்தைக் கொடுப்பவர் ஆவார். ஆகையால் இந்த ஞான யக்ஞத்தில் முழு பழைய உலகமும் சுவாஹா (ப-யீடுபொருள்) ஆகி விடும். நாம் பிராமணர்கள் யக்ஞ சேவையாளர்கள் என்று உங்களுக்குத் தெரியும். நாம் பிராமணர்கள் பிரம்மாவின் உண்மை யான முக வம்சாவழியினர் என்பதால் பாபா என்ன சொல்கிறாரோ அதைக் கேட்க வேண்டும். ஸ்ரீ ஸ்ரீயின் சிரேஷ்ட வழிப்படி தான், நாம் சிரேஷ்டமாகி ருத்ர மாலையின் மணி ஆகிறோம். வம்சத்தை உருவாக்குகிறார்கள்-- வாஸ்வானியின் வம்சம், கிருபளானியின் வம்சம் என்றெல்லாம். மேலே சிவபாபா இருக்கிறார், அவருடையது நிராகார வம்சம். நிராகார வம்சத்தைச் சேர்ந்த அவர் சாகார வம்சத்தவர் ஆகிறார். பிரஜாபிதா முதல் நம்பரில் வருகிறார். ஆக இவர் (பிரம்மா) உலகாயத தந்தை மற்றும் அவர்(சிவபாபா) ஆன்மீகத் தந்தை ஆகிறார். ஆன்மீகத் தந்தை பிரஜாபிதா பிரம்மா மூலமாக படைப்பைப் படைக்கிறார். அவரை அழைக்கவும் செய்கிறார்கள், ஏ! பதீத பாவனா வாருங்கள், பழைய அழுக்கான உலகத்தை தூய்மையாக்க வாருங்கள் என. புதிதாக உருவாக்குவதில்லை, பிரளயம் ஏற்படுவதில்லை. உலகத்தின் வரலாறு புவியியல் மீண்டும் நடக்கிறது. 84 பிறவிச் சக்கரம் மீண்டும் ஆரம்பமாகிறது. எல்லைக்கப்பாற்பட்ட தந்தையிடமிருந்து எல்லைக்கப்பாற்பட்ட ஞானம் கிடைக்கிறது, எல்லைக்கப்பாற்பட்ட ஆஸ்தி கிடைக்கிறது. எல்லைக்கப்பாற்பட்ட தந்தையை

அனைவரும் நினைவு செய்கின்றனர், ஹே! பகவான் என்று சொல்கிறார்கள் அல்லவா! ஹே! ஈஸ்வர், ஹே பிரபு என்று சொல்வதனால் எந்த சித்திரமும் (உருவ அமைப்பு) நினைவுக்கு வருவதில்லை. நிராகாரம் (சரீரமற்றவர்) நினைவுக்கு வருகிறது. பகவானை நினைவு செய்யுங்கள் என்று சொல்லவும் செய்கிறார்கள். அவர் தந்தை அல்லவா! நாம் அனைவரும் சகோதரர்கள். ஆத்மாக்களுக்காகச் சொல்கிறார்கள், அனைவரும் சகோதரர் களே. அனைவரும் அழைக்கின்றனர் -- ஹே பதீத பாவன், துக்கத்தை அழிப்பவரே, சுகத்தைத் தருபவரே, விடுவிப்பவரே வாருங்கள், வந்து வழி நடத்துங்கள். வீடு மறந்து விட்டது, நினைவு இருந்தாலும் நாம் செல்ல முடிவதில்லை. யோகம் செய்வது மூலம் நெய் விடப்படுவது போலாகிறது. ஆத்மா அழியாதது அல்லவா! ஆக ஆத்மாவின் ஜோதி முழுமையாக எரிய ஆரம்பிக்கவில்லை. ஆகையால் இப்போது யோகபலம் என்ற நெய் விட வேண்டும். ஆக சதா காலத்திற்கு தீபமாலை பிரகாசம் ஆகிவிடும். தீபமாலை என்றால் வீட்டுக்கு வீடு பிரகாசம் ஆகும். ஆக தீபமாலை எங்கே ஏற்படும்? சத்யுகத்தில். இங்கே அல்ல. இந்த அனைத்து ரகசியங்களையும் நீங்கள் புரிந்து கொள்கிறீர்கள், உங்களிடம் குருட்டு நம்பிக்கை கிடையாது. நல்லது

இனிமையிலும் இனிமையன காணாமல் கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகளுக்கு தாயும் தந்தையுமான பாப்தாதாவின் அன்பு நினைவுகள்: மற்றும் காலை வணக்கங்கள். ஆன்மீகத் தந்தையின் ஆன்மீகக் குழந்தைகளுக்கு நமஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. கவலைகளிலிருந்து விடுபட பாபாவுக்குச் சமமாக ஞானம் நிறைந்தவராக வேண்டும். புத்தியில் எப்போதும் ஞானத்தை சிந்தனை செய்து கொண்டே இருக்க வேண்டும்.

2. ஆன்மீக சேவை செய்து தன்னுடைய பிராலப்தத்தை (பலனை) உருவாக்க வேண்டும். பழையது அனைத்தையும் மாற்றம் (புது உலகத்திற்காக) செய்து விட வேண்டும்.

வரதானம் : அனைவருக்காகவும் சுபமான நன்மை நிறைந்த பாவனை வைத்து பரிவர்த்தனை செய்யக்கூடிய எல்லையற்ற சேவாதாரி ஆகுக.

எங்களுடைய இந்த உறவினர் மாறிவிட வேண்டும் என்று பெரும்பான்மையான குழந்தைகள் பாப்தாதாவிற்கு முன்னால் தங்களுடைய இந்த விருப்பத்தை வைக்கின்றார்கள். வீட்டில் இருப்பவர்கள் துணையாக ஆகவேண்டும், ஆனால், அந்த ஆத்மாக்களை மட்டும் தன்னுடைய வராகப் புரிந்து கொண்டு இந்த ஆசை வைத்தீர்கள் என்றால் எல்லைக்குட்பட்ட சுவர் இருக்கும் காரணத்தினால் உங்களுடைய சுபமான நன்மை நிறைந்த பாவனை அந்த ஆத்மாக்கள் வரை சென்றடைவதில்லை. எல்லையற்ற சேவாதாரி அனைவருக்காகவும் ஆன்மீக உணர்வு மற்றும் எல்லையற்ற ஆன்மீக திருஷ்டி, சகோதரா - சகோதரா என்ற சம்பந்தத்தினுடைய விருத்தியோடு சுப பாவனை வைக்கின்றார்கள் ஆதலால், அதனுடைய பலன் அவசியம் கிடைக்கின்றது - இது தான் மனதினுடைய சேவைக்கான யதார்த்த விதி ஆகும்.

சுலோகன்: ஞானம் என்ற அம்புகளை புத்தி என்ற அம்பறாத் தூணியில் நிறைத்து

மாயாவிடம் அறை கூவல் விடுபவர்கள் தான் மகாவீர் போர்வீரர்கள் ஆவார்கள்.